# 19 சீதையம்மன் ஆலயம்

இலங்கைத் திருநாட்டின் மத்திய மாகாணத்தில் இயற்கை எழில் கொஞ்சும் நகரம் நுவரெலியா மாநகரமாகும். இந்நகரிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.இவ்வாலயத்தில் ஸ்ரீராமபிரான், சீதை, ஸ்ரீலட்சுமணன், ஸ்ரீ ஆஞ்சனேயர் ஆகிய திருவுருவங்கள் மூலமூர்த்திகளாகவுள்ளன. இவ்வாலயம் இராமாயண காலத்தில் இருந்து வணங்கப்பட்டுவந்ததாகஇதிகாசப்புராணங்கள் கூறுகின்றன.




அசோகவனத்தில் (சீதாஎலிய) சீதை

சீதா தேவியை சிறை எடுத்து வந்த இலங்கை வேந்தன் இராவணன் சீதாஎலிய எனும் பகுதியிலேயே சிறை வைத்திருந்தான். இந்த இடம் அசோக மரங்களால் சூழப்பெற்ற அடர்ந்த காடாக இருந்தமையால் அசோகவனம் எனவும் அழைக்கப் படுகின்றது. சீதையம்மன் ஆலயத்தோடு ஒரு நீரோடை அமைகின்றது. சிறை வைக்கப் பட்டிருந்த சீதை இங்குதான் நீராடி வந்ததாகவும் இந் நீரோடையில் பாறைகளிடையே ஒரு குகை போன்ற சிறுவாயில் வழியாக இரண்டு வித்தியாசமான நிறப்பூக்களைப் போட்டு மறு முனையில் வெளிவரும்



சீதை நீராடிய ஓடை





தற்போதய ஆலயம்

முதற்பூவை அடையாளமாகக் கொண்டு பக்தர்கள் தமது வேண்டுதல்களை நிறைவேறுமா? நிறைவேறாதா? என்பதனை தீர்மானிக்கும் சக்தியாக இத்தலத்தின் நீரோடை விளங்கியதாக கர்ணபரம்பரைக் கதைகள் மூலமாக அறியக்கூடியதாகவுள்ளது.

பல வருடங்கட்கு முன்பு விவசாய தேவைகட்காக பாரிய கிணறு ஒன்று வெட்டினார்கள். அப்போது அற்புதமொன்று நிகழ்ந்தது. வெட்டப்பட்ட கிணற்றில் ஸ்ரீராமபிரான், சீதாதேவி ,லக்சுமணன்,ஆஞ்சனேயர் ஆகியோரின் திருவுருவங்கள் கறுப்பு நிறத்தில் தத்ரூபமாகக் காட்சியளித்தன. இதனைக் காண பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நேரில் வந்து தரிசித்தாக அறிய முடிகின்றது. இந்த அற்புதம் நடந்த இடத்தை விலைகொடுத்தாவது வாங்கி அழியாத வரலாற்றுச் சின்னமாக்க வேண்டும் என்பது இங்குள்ள இராம பக்தர்களின் தீவிரமான கோரிக்கையாகும்.

ஆரம்பகாலத்தில் இவ்வாலயத்தின் சிறப்பினைக் கர்ணபரம்பரைக் கதைகளூடாக அறியமுடிகிறது. இவ்வாலயப் பொறுப்பினை ஆர்.பி. புட்டானி, கே. எஸ். அருளம்பலம், எஸ். மாணிக்கவாசகர் ஆகியோர் ஏற்று நடாத்தினார்கள். கி.பி 1918ம் ஆண்டு 32 பட்டிகள் (பேர்ச்சஸ்) காணி குத்தகைக்கு கொடுக்கப்பட்டது.

இவ்வாலய நிர்வாக சபையினதும் வர்த்தக பிரமுகர்களதும், இந்திய இலங்கை நாட்டு பக்தர்களினதும் அயராத முயற்சியின் பயனாக 1998 ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டது. 2000 ஆம் ஆண்டு மகாகும்பாபிசேகப் பெருவிழாவும் சிறப்பாக நடைபெற்றது.

புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் ஸ்ரீஆஞ்சிநேயருக்கு தனிக்கோயில்

அமைக்கப்பட்டது. மற்றும் கோபுரத்தில் தசாவதாரங்களை விளக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தூண்கள் தோறும் இராமயணக் காட்சியில் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீராமபிரான், சீதாதேவி, இலக்குமணன், ஆஞ்சனேயர் ஆகிய தெய்வங்கள் அதே இடத்தில் நிர்மாணித்திருக்கும் புதிய ஆலயத்திலும் மூலமூர்த்திகளாக வைக்கப்பட்டு சாதிமத பேதமின்றி மக்களால் வழிபடப்பட்டு வருகின்றது. அத்தோடு ஆயவரலாற்றில் 2013 ஆம் ஆண்டு பட்டிப் பொங்கல் தினத்தன்று பரீட்சார்த்தமாக இரதபவனி நடைபெற்று வருடம்தோறும் பட்டிப் பொங்கல் தினத்தில் அந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பயிற்சிகள்

1.சீதையம்மன் ஆலயத்தின் அமைவிடம் யாது?

2.அசோக வனம் என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

3.ஆலயப்பகுதியில் கிணறு வெட்டிய போது நடைபெற்ற அற்புதம் யாது?

4.சீமையம்மன் ஆலயத்திலுள்ள மூலமூர்த்திகள் எவை? அவற்றினைக் குறிப்பிடுக.

தரப்பட்ட சொற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.
(1998ஆம் ஆண்டு, கர்ண பரம்பரை, 2000ஆம் ஆண்டு, இரதபவனி)

1. ஆலயத்தின் சிறப்பினை ..................... கதைகளினூடாக அறியலாம்.

2. ..................... ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டு ..................... ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது.

3. 2013 ஆம் ஆண்டிலிருந்து பட்டிப் பொங்கல் தினத்தன்று ..................... நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும்.

## செயற்பாடு

★ ஆசிரியரின் உதவியுடன் இராமாயணக் கதை பற்றிக் கலந்துரையாடுக.

★ பாத்திரங்களோடு தொடர்புடைய பெயர்களையும், படங்களையும் குறித்து வகுப்பறையில் காட்சிப் படுத்துக.

### பாடச்சுருக்கம்

★ இலங்கையின் மத்திய மாகாணத்திலுள்ள நுவரெலியா மாநகரத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் சீதையம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

★ இராமாயண காலத்திலிருந்து வணங்கப்பட்டு வந்ததாக இதிகாச புராணங்கள் கூறுகின்றன.

★ சீதையை சிறை வைத்த இடமாகவும், அசோக மரங்களால் சூழப்பட்ட காடாகவும் இவ்விடம் விளங்குகின்றது.

★ பல வருடங்களுக்கு முன்பு கிணறு வெட்டும் போது கறுப்பு நிறத்திலான திருவுருவங்கள் காட்சியளித்தனர்.

★ இவ்வாலயச் சிறப்பினை கர்ணப்பரம்பரைக் கதைகளினூடாக அறியக் கூடியதாகவுள்ளது.